Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

பிப்ரவரி
25
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர்,
திருச்சி - 18.

நேரம் : காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை



தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
& குடும்பத்தினர்

தொடர்புக்கு
(0431 – 2741925) 94888 45627

நாகர்கோவிலில்
உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

மார்ச்
சனிக்கிழமை 11

இடம் : அபிஷேக் காம்ப்ளக்ஸ்,
மெத்தை கடை மாடி,
W.C.C. ரோடு, நாகர்கோவில்.

தேவ செய்தி & ஜெபம்
Rev.Dr. A. ஜாஷ்வா



தொடர்புக்கு
94888 45627
82203 17472

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:2 பிப்ரவரி 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 9 ISSUE NO : 2 February 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



## சர்வ வல்ல தேவனால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை!



### மரண நோயை நீக்கி நீடித்த வாழ்வை அருளிய கர்த்தர்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் அம்மா பெயர் ஜூலியட். நான் 8-ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தப்பொழுது என் அம்மாவின் மார்பகத்தில் புற்று நோய் வந்தது. அதனிமித்தம் கடுமையாக பாதிக்கப்பட்டு அதிக வேதனையை அனுபவித்தார்கள். மரித்துவிடுவார்களோ என ஒவ்வொரு நாளும் நாங்கள் பயந்துக்கொண்டிருந்தோம்.

அப்பொழுது நாசரேத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நானும் என் அம்மாவும் வந்திருந்தோம். **கூட்டம் முடிந்து தனி ஜெப வேளையில் சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என் அம்மாவைப் பார்த்து, உன் துக்க நாட்கள் முடிந்துபோம். இனி இந்த மரண வியாதி உன்னை ஒன்றும் செய்ய முடியாது இயேசுகிறிஸ்து உன்னை குணமாக்குகிறார் என்று சொன்னார்கள். மிகவும் ஆச்சரியப்பட்டோம்.** அந்த நாளிலிருந்து என் அம்மாவிற்கு இருந்த அந்த கேன்சர் வியாதியின் சக்தி குறைந்து, அதன் தாக்கம் தணிந்தது. இறுதியில் கேன்சர் நோயின் அறிகுறியே என் அம்மாவிற்கு இல்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள்.

இப்பொழுது 20 வருடமாக என் அம்மா நல்ல சுகத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். மகத்தான இந்த அற்புதங்களைச் செய்த தேவனை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். ஐயாவிற்காக அனுதினமும் என் அம்மா ஜெபிக்கிறார்கள். அவர்களால் இயன்ற உதவியை ஊழியத்திற்கு தவறாமல் செய்கிறார்கள்.

என் அத்தை பெயர் ஜாய்ஸ். அவர்கள் ஆசிரியர் வேலைக்காக 3 முறை இன்டர்வியுக்கு சென்று வந்தார்கள். ஆனால் ஆசிரியர் வேலை கிடைக்கவில்லை. அதனால் அதிக கஷ்டப்பட்டார்கள். **அந்த நாட்களில் அருப்புக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்திற்கு என் அத்தையும் மாமாவும் போயிருந்தார்கள். தனி ஜெப வேளையில் சகோதரர் அவர்கள், மகளே கலங்காதே, கர்த்தர் நிச்சயமாக அந்த வேலையை உனக்குத் தருவார் என்று சொல்லி ஜெபித்து அனுப்பினார்கள்**

**அதன்பின் கர்த்தர் ஒரு அதிசயம் செய்தார். என் அத்தைக்கு ஆச்சரியமாக அந்த வேலை கிடைத்தது. இத்தகைய மகத்தான அற்புதங்களை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

**தேவன் செய்த இந்த மகத்தான அதிசயங்களை எண்ணி அன்பரின் ஊழியத்தில் இருக்கிற அன்பரின் ஊழியத்திற்கும் S.J. Saves Trust பணிகளையும் உற்சாகமாய் தாங்குகிறோம்.**

**- திருமதி. ஆஷா எடிசன், அருப்புக்கோட்டை**



## Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் நாகர்கோவிலில் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!

### கூட்டத்திற்கு அழைத்து வந்து சுகம் கொடுத்த கர்த்தர்!



என் பெயர் ஜான். என்னுடைய வலது கால் வீங்கி இருந்தது. அதனால் அதிக கஷ்டப்பட்டேன். நாகர்கோவிலில் உங்கள் விடுதலையின் நாள் கூட்டம் நடைபெறுவதைக் குறித்து ஒரு நண்பர் என்னிடம் தெரிவித்தார். அதற்காக நான் தயாராகி பஸ் ஸ்டாப்பிற்கு வந்து விட்டேன். திடீரென என்னுடைய செல்போன் வேலை செய்யவில்லை. அதனால் கூட்டம் நடைபெறுகிற இடத்தை கண்டு பிடிப்பதில் அதிக சிரமப்பட்டேன். அந்த நேரத்தில் அங்கு நின்ற ஒரு சகோதரி நானும் அந்த கூட்டத்திற்கு தான் செல்கிறேன் வாருங்கள் என அழைத்து வந்தார்கள்.

**ஜெப வேளையில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் நோயாளிகளுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். நானும் ஜெபித்தேன். அப்பொழுது என் காலில் உள்ள வலி, வேதனை நீங்கியது. கூட்டத்திற்கு வருவதற்கு வழி தெரியாமல் நின்ற என்னை கூட்டத்திற்கு அழைத்து வந்து சுகம் கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.** பாஸ்டர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**- சகோ. ஜான், ஆரணாமலை**

### பெயர் சொல்லி அழைத்து, மனபாரத்தை நீக்கி, சமாதானம் தந்த கர்த்தர்!



என் பெயர் ரெபேக்கா. கடந்த 3 மாதங்களாக நான் சரீர பெலவீனத்துடன் இருந்தேன். அத்துடன் என் மனதிலும் ஒருவித கலக்கம், கவலை, கண்ணீர் மனபாரம் என்னை அதிகமாக அழுத்தியது. மிகுந்த மனபாரத்துடன் தான் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தேன்.

**ஜெப வேளையில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் என் பெயரை சொல்லி அழைத்து, "ரெபேக்கா, நீ பல பிரச்சனைகளுடன், மிகுந்த கவலையோடு வந்திருக்கிறாய், கர்த்தர் இப்பொழுது அவற்றை நீக்கி உனக்கு சமாதானம் தருகிறார்"** என சொன்னப்பொழுது என் உள்ளத்திற்குள் சமாதானம் வருவதை உணர்ந்தேன். அந்த நேரமே என் மனபாரமும் நீங்கியது. பாஸ்டர் வாயிலாக என்னை பெயர் சொல்லி அழைத்து சமாதானத்தை கொடுத்த கர்த்தரை துதிக்கிறேன்.

**- சகோதரி ரெபேக்கா, கன்னியாகுமரி.**

### சுகமளிக்கும் காற்று சுகம் தந்தது!



என் பெயர் ப்ளாரன்ஸ். அன்பரின் ஊழிய பங்காளராக இருந்துவருகிறேன். கர்த்தர் தாமே எனக்கு ஏற்பட்ட மரண கட்டுகளிலிருந்து மூன்று முறை என்னை காப்பாற்றி ஜீவனைக் கொடுத்திருக்கிறார். சமீபத்தில் பஸ்ஸிலிருந்து கீழே விழுந்து விட்டேன். அதனால் என் தோள்பட்டையில் வலி இருந்து வந்தது. வலி, வேதனையுடன் தான் கூட்டத்திற்கு வந்தேன்.

**ஜெப வேளையில் நான் கண்ணீரோடு ஜெபித்துக்கொண்டிருந்தேன். Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் சுகமளிக்கும் காற்று வீசுகிறது என சொன்னார்கள். அந்த நேரத்தில் எனக்கிருந்த தோள்பட்டை வலி நீங்கியது. அற்புத சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- சகோதரி ப்ளாரன்ஸ், கன்னியாகுமரி.**



# அன்பரின் ஊழியம்

மலர்: 9 ◆ பிப்ரவரி 2023 ◆ இதழ் 2

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

எங்களை எப்பொழுதும் நேசித்து ஜெபித்து தாங்குகிற அன்பு பங்காளர்கள் ஒவ்வொரு வரையும் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன்.

ஜனவரி மாதம் முழுவதும் நம்மை தம் கண்மணியைப் போல பாதுகாத்து வந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம். தொடர்ந்து **உங்களுடைய தனி ஜெபத்தையும், கர்த்தரோடு நேரம் செலவிடுவதையும் அதிகப்படுத்துங்கள். அப்பொழுது தான் இந்த உலகத்தில் வெற்றி யுள்ள வாழ்க்கையை நம்மால் வாழமுடியும்.**

வரும் நாட்களில் உலகின் பல இடங்களில் ஆவிக்குரிய யுத்தம் வெளிப்படையாக நடைபெறு வதை நாம் பார்ப்போம். பிசாசு தனக்கு கொஞ்ச காலம் தான் இருக்கிறதென்று அறிந்து பயங்கர மான காரியங்களை செய்வான். இம்மட்டும் மறைமுகமாய் திரையில் பார்ப்பதைப் போல் இவை காணப்பட்டாலும், இனி பகிரங்கமாய் வெளிப்படும். ஆனாலும் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் கர்த்தர் தாமே இடைபட்டு பிசாசை தோற்கடித்து தம் காலின் கீழே நசுக்குவார். அத்துடன் எல்லாருடைய விசுவாசமும் சோதிக்கப்படும் நாட்களாய் இனி இருக்கின்றன. ஆகவே கவனமாயிருங்கள்.

**கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிற வர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக் கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடி வந்தார்கள். யாத்திராகமம் 32:26**-ன்படி நீங்கள் யார் பட்சமாய் இருக்கிறீர்கள்? தேவனுடைய பட்சமாய் இருந்து அவர் வருகைக்கு ஆயத்தப் படுங்கள். உங்கள் குடும்பத்தினரை ஆயத்தப் படுத்துங்கள் சின்னச் சின்ன பிரச்சனைகளைக் கண்டு சோர்ந்து போகாதீர்கள். கர்த்தர் உங்களோடு இருந்து உங்களை காப்பார்.

- **ஜனவரி மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். பயணங்களில் பாதுகாப்பை தந்தார். அதற்காக கர்த்தரை துதியுங்கள்.**
- **பிப்ரவரி மாதம் நடைபெறயிருக்கிற திருச்சி, செகந்திராபாத், விஜயவாடா கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள்.**

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

சந்தா விபரம்
இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/-. ஆயுள் சந்தா ரூ.2,000/-.
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1,500/-. ஆயுள் சந்தா ரூ.15,000/-.

24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205
e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

❖ பங்காளர்கள் என்னை தனியே சந்தித்து, ஜெபித்து ஆலோசனை பெறுவதற்காக ஒரு குறிப்பிட்ட நாளை ஒழுங்கு செய்திருக்கிறேன். முன்பதிவு செய்து விட்டு வாருங்கள். அதற்குரிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

❖ அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தின் பராமரிப்பு பணிகள், Painting வேலைகளுக்குரிய தேவைகளை கர்த்தர் சந்திக்கும்படி ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்தின் சார்பாக நீங்களும் உற்சாகமாய் தாங்குங்கள். தொடர்ந்து ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

❖ வாசல்கள் அடைபட்டிருக்கிற இந்த காலத்திலே சுவிசேஷம் சென்றடைவதற்கான வழிகளை கர்த்தர் திறந்து தரும்படி ஜெபியுங்கள்.

❖ S.J.Saves Trust-ல் செய்து வருகிற அனைத்து பணிகளுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

❖ S.J.S.T மருத்துவனைக்காக விசேஷமாய் ஜெபியுங்கள். கர்த்தர் கொடுத்திருக்கிற தரிசனத்தின்படி விரைவில் மருத்துவமனையை கட்டுவதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

❖ எங்கள் பெற்றோரின் நல்ல சுகத்திற்காகவும், அவர்களுடைய நல்ல ஆரோக்கியத்திற்காகவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

சமூக வலைதளங்கள் வாயிலாக வெளிவருகிற **Ministry of Jesus**-ன் அனுதின அற்புதம், புதியபாடல்கள், நேரலை நிகழ்ச்சிகளை பாருங்கள். அனுதின அற்புதம் இன்னும் பலமொழிகளில் வெளிவர ஜெபியுங்கள். ஸ்டுடியோ பணிகளை நன்கு செய்யக்கூடிய பிள்ளைகள் உங்கள் குடும்பங்களில் இருந்தால் அன்பரின் ஊழியத்திற்கு அனுப்பி வையுங்கள்.

ஊழியத்தின் தேவைகள் மாதந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பத்திரிக்கை ஊழியம், டி.வி. ஊழியம் மற்றும் சுவிசேஷ கூட்டங்களை நடத்துவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். மறவாமல் தாங்குங்கள்.

**இம்மாத வாக்குத்தத்தம்**

**ஆதியாகமம் 12:2**
**மல்கியா 3:17-18**
**2 தெசலோனிக்கேயர் 3:3**
**ரோமர் 16:20**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

# தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

**பிப்ரவரி 26 ஞாயிற்றுக் கிழமை**

**நேரம் : மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை**

தனி ஜெபம் & ஆலோசனை வழங்குபவர்

## Dr. ஜேன் ஜாஷ்வா

குடும்ப ஆலோசனைகள், படிப்பு, வேலை, எதிர்காலம் மற்றும் ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற விரும்புகிறவர்கள் இந்த நாளில் நேரில் வாருங்கள். உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். உங்களுக்காக தனித்தனியாக ஜெபம் ஏறெடுக்கப்படும்.

கீழ்க்கண்ட இந்த எண்ணிற்கு தொடர்புக் கொண்டு முன்பதிவு செய்துப் பிறகு நேரில் வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தொலைபேசி எண்கள் : **94888 45627, 80987 42638, 0431 - 2741925 (10 am - 6 pm)**




## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**HARVEST കേരളം**
சனி
இரவு 7.30 – 8.00

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி : 82203 17472
சென்னை : 77081 53666



# நன்மையும் கிருபையும்

தேவ செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்கு பிரியமான பங்காளர்களுக்கும் அன்பான வாசகர்களுக்கும் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். சங்கீதம் 23:6** இந்த அருமையான வேத வசனத்தை நமக்கு வாக்குத்தத்தமாக கொடுத்த கர்த்தரை ஸ்தோத்தரித்து, இந்த தேவ செய்தியை உங்களுக்கு எழுதுகிறேன்.

பிரியமானவர்களே, **சங்கீதம் 23-ன்** சிறப்பு அனைவருமே நன்கு அறிந்திருக்கக்கூடிய ஒரு சங்கீதம் என உறுதியாக கூறலாம். உலகெங்குமுள்ள விசுவாசிகள் தங்களுடைய இக்கட்டான நேரங்களில் **சங்கீதம் 23-ஐ** சொல்லி ஜெபித்து தேவ ஒத்தாசையை பெற்று இருக்கிறார்கள். ஆறுதல் அடைந்திருக்கிறார்கள். விடுதலையடைந்திருக்கிறார்கள். நன்கு ஜெபிக்க தெரியாதவர்களும்கூட இந்த சங்கீதத்தை நன்கு அறிந்திருப்பார்கள்.

உலகத்தில் நாம் வாழும்போது என்னென்ன ஆசீர்வாதங்கள் நமக்கு தேவையோ அவை எல்லாமே **சங்கீதம் 23-ல்** இருக்கிறது. வியாதியோ, பணப் பிரச்சனையோ, போராட்டமோ எதுவாயிருந்தாலும் அதற்குரிய தீர்வு இந்த சங்கீதத்தில் காணப்படுகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் பின்தொடரும் என்ற வாக்குத்தத்தத்தில் முதலில் உலகப்பிரகாரமான நன்மைகளைக் குறித்தும், ஆவிக்குரிய நன்மைகளைக்குறித்தும் உங்களுக்கு எழுதுகிறேன்.

## உலகப் பிரகாரமான நன்மைகள்

ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து ஆசீர்வாதங்களும் இந்த நன்மை என்ற வார்த்தைக்குள் அடங்கி விடுகிறது. உதாரணமாக படிப்பு, வேலை, திருமணம், குழந்தை பிறப்பு, அந்தஸ்து, சொத்துக்கள் என சொல்லிக்கொண்டே செல்லலாம். ஆம். நம் வாழ்வின் நன்மைகளை ஆண்டவரிடமிருந்தே நாம் பெற்றுக்கொள்ள முடியும். **அப்போஸ்தலர் 10:38-ல்** பார்க்கிறபடி **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்.** இயேசு தம்மிடம் வந்த நோயாளிகளை சுகமாக்கி அனுப்பினார். பிசாசின் கட்டில் இருந்தவர்களை விடுதலையாக்கினார். சிறு பிள்ளைகளை ஆசீர்வதித்தார். அனைவரையும் நேசித்தார், ஆறுதல்படுத்தினார். **சங்கீதம் 119:68-ல்** கர்த்தர் நல்லவரும் எப்பொழுதும் நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர் என வாசிக்கிறோம்.

## உடன்படிக்கையின் நன்மை

நல்லவரும் நன்மை செய்கிறவருமாகிய தேவன் தாமே நமக்கு எப்பொழுதுமே நன்மை செய்வேன் என நித்திய உடன்படிக்கை பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையே அன்றி தீமை செய்ய மாட்டேன் என்று நித்திய உடன்படிக்கையையும் பண்ணுகிறார். இந்த உலகத்தில் எந்த ஒரு நபரும் உனக்கு நன்மையை மட்டுமே செய்வேன். தீமை செய்ய மாட்டேன் என உறுதி கூறமுடியாது. ஏனென்றால் உலகத்தில் ஒரு சிலர் நீ எனக்கு நன்மை செய்தாய் நான் உனக்கு நன்மையே செய்கிறேன் என வாழ்வர். ஒரு சிலர் நீ எனக்கு தீமை செய்தாய் ஆகவே நானும் உனக்கு தீமையே செய்கிறேன் என வாழ்வர். மற்றும் சிலர் நாம் நன்மை செய்தாலும் அதைக் கண்டுக்கொள்ளாமல் வாழ்ந்துக் கொண்டிருப்பார்கள். இதுதான் சாதாரண

மனிதர்களின் இயல்பு. நீங்கள் நன்மை செய்தாலும் அதை மறந்து, துணிந்து உங்களுக்கு தீமை செய்கிற உலகமாக தற்பொழுது மாறிக்கொண்டிருக்கிறது. ஆனால் **நம் கர்த்தர் ஒருவரே நித்தமும் நன்மை செய்வேன் என உடன்படிக்கை பண்ணுகிறார்.**

- **அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னை விட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து,**
- **அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னை விட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து,**
- **அவர்களுக்கு நன்மைசெய்யும்படி அவர்கள் மேல் சந்தோஷமாயிருந்து, என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்தத் தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன்.**
- **நான் இந்த ஜனத்தின்மேல் இந்தப் பெரிய தீங்கையெல்லாம் வரப்பண்ணினதுபோல, அவர்களைக்குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும் அவர்கள்மேல் வரப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 32:40-42**

மேற்கூறிய வசனங்களின்படி **நன்மை செய்ய பின்வாங்குவதில்லையென்று கர்த்தர் நித்திய உடன் படிக்கையை பண்ணுகிறார். நன்மை செய்யும்படி அவர் சந்தோஷமாயிருக்கிறார். இந்தப் பெரிய தீங்கை வரப்பண்ணினதுபோல அவர்களைக் குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும் வரப்பண்ணுவேன் என கர்த்தர் சொல்லுகிறார்.**

## திருப்தியாக்கும் நன்மை

**நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது. சங்.103:5. என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 31:14.** இன்றைக்கு சிறு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை ஏதாவது ஒரு விஷயத்தில் அவர்களுக்கு சிறு குறை இருக்கலாம். வாழ்க்கைக்கு தேவையான அனைத்து செல்வங்களை ஒருவர் பெற்றிருந்தாலும் அவர்கள் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு சிறு குறை, கஷ்டம் என்பது இருக்கவே செய்கிறது. ஆனால் நம் ஆண்டவர் ஒருவரே அனைவரையும் நன்மையினால் திருப்தியாக்கி மகிழுகிறார். **ஆண்டவர் உங்களுக்கு கொடுக்கிற நன்மையில் குறைவு இருக்காது. ஏனென்றால் நல்லவராயிருந்து நன்மையை கொடுக்கிறவரிடமிருந்து புறப்படுகிற நன்மை எப்பொழுதும் சம்பூரணமாயிருக்கும்.** இந்த நன்மைகள் உலகப்பிரகாரமாக மாத்திரம் அல்ல, ஆவிக்குரிய பிரகாரமாகவும் இந்த நன்மை தொடரும்.

## ஆவிக்குரிய நன்மைகள்

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. யாக். 1:17.** இந்த வசனத்தின்படி நல்ல ஈவாகிய ஆவிக்குரிய நன்மைகளை நமக்கு அருள்பவர் நம் தேவனாகிய கர்த்தர். **பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார். லூக்கா 11:13-ல்** எழுதியிருக்கிறபடி பரிசுத்த ஆவியானவரே அந்த நல்ல ஈவு. ஆவிக்குரிய நன்மைகளின் அஸ்திபாரமே பரிசுத்த ஆவியானவர். அவர்தான் நன்மையான ஈவு. இந்த நன்மையான ஈவை கர்த்தர் கொடுக்கும்பொழுது நமக்கு உலகில் உள்ள எல்லாவற்றைக்காட்டிலும் அவரே நமக்கு பெரிதானவராக இருக்கிறார். இதைவிட பெரிய நன்மை ஒன்று இந்த உலகில் இருக்கவே முடியாது.

## கிருபை

நன்மையான ஈவிலிருந்தே நாம் கிருபையையும், தயவையும், இரக்கத்தையும், நீடிய பொறுமையையும் பெறுகிறோம். மனுஷனால் இந்த கிருபையை காட்டவே முடியாது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் மட்டுமே கிருபையை காட்ட முடியும். **அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். யோவான் 1:14** கர்த்தரை தெய்வமாக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அருளப்படும் ஆவிக்குரிய வரங்கள் அவர்களுடைய தகுதியினாலே தரப்படுவது அல்ல! அது அவருடைய சுத்த கிருபையே இந்த கிருபை எப்படிப்பட்ட கிருபை?

## நம்மை விட்டு விலகாத கிருபை

வேதத்தில் மீண்டும் மீண்டும் அவர் கிருபை என்றுமுள்ளது என எழுதப்பட்டுள்ளது. கர்த்தரை விட்டு எவ்வளவு தூரம் நீங்கள் சென்றாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் உங்களை இழுத்துக் கொள்வார். **மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார் ஏசாயா 54:10**-ன்படி கர்த்தருடைய கிருபை விலகாது உங்களோடுகூட தங்கியிருக்கும்.

## அளவிடப்பட முடியாத கிருபை

கர்த்தருடைய கிருபையை ஒருநாளும் அளவிட முடியாது. கடல் தண்ணீரை எப்படி துல்லியமாக அளவிட முடியாதோ அதேப்போல கர்த்தருடைய கிருபையையும் அளவிட முடியாது. **யாக்கோபு 4:6**-ன்படி இந்த அதிகமான கிருபை, சகலவிதத்திலும் நம்மிடம் அருளப்படுகிறது. **நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். 2கொரி.9:8** இந்த கிருபையை உங்கள் வாழ்க்கையிலும் சகல விதங்களிலும் தேவன் பெருகச் செய்வாராக!

## அதிசய கிருபை

**கர்த்தருடைய கிருபை பெருகும்பொழுது உங்கள் வாழ்க்கையில் அதிசயங்கள் நடக்கும். (சங்.17:7)** நம் வாழ்க்கையில் கர்த்தருடைய கிருபை ஒருநாளும் விருதாவாய் போகாது. கர்த்தருடைய கிருபை உங்களை பின்தொடரும்பொழுது அதிசயங்கள் நடப்பது மட்டுமல்ல, விசேஷித்த ஆசீர்வாதங்களை அது உங்களுக்கு கொண்டு வரும். எனவே தான் பவுல் அவருடைய கிருபை என்னிடத்தில் விருதாவாய் போகவில்லை என்று கூறுகிறார். ஆம் இந்த கிருபை நமக்கு இருக்கும்போது பவுலைப் போல நாமும் சொல்ல முடியும்.

பிரியமானவர்களே, கர்த்தர் அருளுகிற நன்மையைக் காட்டிலும் ஒரு பெரிய நன்மையை நீங்கள் தேடிட முடியாது.கர்த்தருடைய கிருபையைக் காட்டிலும் ஒரு பெரிய கிருபையை மனுஷன் காட்டிட முடியாது. இப்போது நாம் வேதத்திலிருந்து இருவருடைய வாழ்க்கையில் நன்மையும், கிருபையும் எவ்வாறு தொடர்ந்தது என்பதைப் பார்ப்போம்.

## யாக்கோபின் வாழ்வில் தொடர்ந்த நன்மையும், கிருபையும்

யாக்கோபு தன் தாயின் அறிவுரைப்படி செயல்பட்டு ஏசாவை ஏமாற்றி தகப்பனிடமிருந்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டான். அதன் பின்பு ஏசாவிற்கு பயந்து தன் மாமன் வீட்டிற்கு தப்பிச் சென்றான். அந்த நேரத்தில் அவன் செய்த ஜெபம், கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் அனைத்தும் **ஆதியாகமம் 28-ம்** அதிகாரத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

ஈசாக்கு - ரெபேக்காள் ஏராளமான ஆஸ்தி உடையவர்களாயிருந்தவர்கள். யாக்கோபை அனுப்பும் பொழுது வெறும் கையாக அனுப்பாமல் ஏராளமான பரிவாரங்களுடன் யாக்கோபை அனுப்பி வைத்தனர் என்று யூத சரித்திரத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் தப்பிச்சென்ற யாக்கோபை கொன்று போடவேண்டும் என்பதே ஏசாவின் விருப்பம், கட்டளை அதற்காகவே ஏசா தன் மகனிடம், இந்த காரியத்தை செய்து முடிக்கும்படி அனுப்பினான். ஆனால் ஏசாவின் மகன் யாக்கோபை கொன்று போடாமல் அவனிடமிருந்த அனைத்து பரிவாரங்களையும் எடுத்துக்கொண்டு, யாக்கோபை ஜீவனோடு மட்டும் விட்டுச்செல்கிறான். இவ்வாறு ஒன்றும் இல்லாத நிலையில் தான் யாக்கோபு ஒரு கல்லை எடுத்து தன் தலைக்கு வைத்து படுத்துக் கொள்கிறான். அப்பொழுதுதான் கர்த்தர் யாக்கோபுக்கு வாக்குத்தத்தம் கொடுத்தார். **நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன். நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார். ஆதி.28:15**

**யாக்கோபு: தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப் பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார். நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும். தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான். ஆதி.28:20-22.** யாக்கோபு தனக்கு உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தாரும் என தேவனிடம் கேட்டான். ஆனால் கேட்காத

நன்மைகளையும் கர்த்தர் அவனுக்கு கொடுத்தார். கர்த்தர் அருளிய நன்மை மிகப்பெரியது. **இவ்விதமாய் அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான். ஆதி.30:43**

ஆதியாகமம் 31-ம் அதிகாரத்தில் லாபானைக் குறித்து பார்க்கிறோம். இந்த லாபான் யாக்கோபின் மீது கொஞ்சம்கூட அன்பில்லாதவன். மிகுந்த பண ஆசை உள்ளவன், யாக்கோபின் சம்பளத்தை 10முறை மாற்றியவன். யாக்கோபு தன் மனைவிகள், பிள்ளைகள், வேலைக்காரர்கள் மற்றும் திரளான ஆடுகள், ஒட்டகங்கள், கழுதைகளுடன் லாபானுக்கு தெரியாமல் வெளியேறியபொழுது கர்த்தர் லாபானுக்கு சொப்பனத்தில் தோன்றி நீ யாக்கோபுடன் நன்மையே அன்றி தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என கட்டளையிடு கிறார். **தேவன் ஒரு மனுஷனுக்கு நன்மை செய்ய துணையாக நிற்கும்பொழுது வேறு ஒருவரும் அந்த மனுஷனுக்கு எந்த தீங்கும் செய்யாதபடிக்கு கர்த்தர் தாமே தடுத்து நிறுத்துகிறார்.**

அதற்கு பிறகு **ஆதியாகமம் 32-ம்** அதிகாரத்தில் ஏசா நானூறு பேருடன் வருகிறான் என்பதை யாக்கோபு அறிந்து பயப்படுகிறான். உடனே கர்த்தரை நோக்கி, நீர் எனக்கு நன்மை செய்வேன் என்று சொல்லியிருக்கிறீரே என கர்த்தரை நோக்கி, அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களை முன்வைத்து ஜெபிக்கிறான். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு, ஏசா யாக்கோபுக்கு எந்த தீங்கும் செய்யாதபடி அவன் மனதை மாற்றுகிறார்.

பல ஆண்டுகள் கழித்து யோசேப்பு காணாமல் போனபோதும் யாக்கோபு தன் துக்கத்திலே மடிந்து போவேன் என சொன்னபோதும், கர்த்தர் யோசேப்பையும், அவன் பிள்ளைகளையும் கூட யாக்கோபு தன் கண்களால் பார்க்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். யாக்கோபின் வாழ்க்கையில் அவன் சிறுவயது முதல் முதிர்வயது வரை, தேசங்களைக் கடந்து, சந்ததிகளைக் கடந்து நன்மைகள் தொடரும் படி கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகம் செய்தார்.

## யாக்கோபின் வாழ்வில் ஆவிக்குரிய நன்மைகள்

உலகப்பிரகாரமான நன்மைகளை பெற்ற யாக்கோபை தேவன் ஆவிக்குரிய நன்மைகளினாலும் நிரப்பினார். **...யாக்கோபை நான் சிநேகித்தேன். மல்கியா 1:2-3ல்** பார்க்கிறபடி ஏசாவை வெறுத்து யாக்கோபை சிநேகித்தார். யாக்கோபுடைய தெரிந்துக் கொள்ளுதலிலே கர்த்தருடைய கிருபை விளங்குகிறது. முடிவில் **தேவனோடும் மனுஷரோடும் போராடி மேற்கொண்டாய் என்று கர்த்தரே இஸ்ரவேல் என பெயரிடுகிறார்.** எவ்வளவு அருமையான உன்னத அனுபவம் பாருங்கள்!

யாக்கோபின் வாழ்க்கையில் ஆவிக்குரிய அனுபவங்கள் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருப்பதையும் நாம் பார்க்க முடியும். முதலாவது தனித்து விடப்பட்ட நிலையில் பரலோக காட்சியை சொப்பனத்தில் கண்டான். அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பெயரிட்டான். **யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன் என்றான். அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான். அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து,அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான். ஆதி.28:16-19.** யாக்கோபு ஒவ்வொரு சமயமும் கர்த்தரை நோக்கி கூப்பிடும்பொழுது கர்த்தர் அவனுக்கு பதில் தந்து அவனோடு பேசுவதை நாம் பார்க்க முடியும்.

**ஏசா அவனுக்கு தீங்கு செய்யாதபடிக்கு தேவ தூதர்களுடைய சேனை அவனுக்கு ஒத்தாசையாக இருக்கின்றார்கள். எனவே மக்னாயீம் என்று பெயரிடுகிறான். சொப்பனத்தில் கண்டவன் இப்போது தேவ தூதர்களை நேரில் கண்டான். அதை விபரமாக நாம் வேதாகமத்தில் வாசிக்க முடியாவிட்டாலும் மக்னாயீம் என்ற பெயரையும் அதன் அர்த்தத்தையும் பார்க்க முடியும். ஆதி.32:9-12**

முடிவிலே மீண்டுமாக **யாக்கோபு தனித்திருந்து தேவனை நோக்கி கூப்பிட்டப் பொழுது, தேவன் அவன் பயத்தைக் கண்டு, தாமே அவனுக்கு காட்சியளித்தார். கர்த்தருடைய முகத்தை நான் கண்டும் உயிரோடிருக்கிறேன் என்று சொல்லி அந்த இடத்திற்கு பெனியேல் என பெயரிடுகிறான்.** எவ்வளவு பாக்கியமான அனுபவம். இத்தகைய ஆவிக்குரிய நன்மைகள் நமக்கு வேண்டுமென்றால் நாமும் யாக்கோபை போல கர்த்தரை நோக்கி பார்ப்போம்.

**யாக்கோபின் வாழ்க்கையில் நடந்த மிகப்பெரிய உன்னத கிருபை என்ன? தேவன் தம் ஜனங்களை ஆசீர்வதிக்கும்பொழுது, நான் ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று கூறியபடியே ஆசீர்வதிக்கிறார்.** முற்பிதாக்களின் தேவன் என்று நாம் சொல்லும்பொழுது யாக்கோபின் பெயரையும்

பயன்படுத்துகிறோம். அது எவ்வளவு பெரிய கிருபை. தேவனுடைய கிருபையும் நன்மையும் இருக்கும் பொழுது உலகப்பிரகாரமான ஆசீர்வாதமும் இருக்கிறது. ஆவிக்குரிய ஆசீர்வாதமும் இருக்கிறது.

பிரியமானவர்களே, இத்தகைய நன்மைகளையும், கிருபைகளையும் நான் பெறுவதற்கு பாத்திரன் அல்ல என நீங்கள் ஒருவேளை நினைக்கலாம். யாக்கோபும் எந்தவிதத்திலும் பாத்திரன் அல்ல. ஆனால் தேவகிருபை அவனை தொடர்ந்தது. அதே கிருபை உங்களையும் தொடரும்.

## தாவீதை தொடர்ந்த நன்மையும், கிருபையும்

ஆடு மேய்க்கிற இடையனாக இருந்த தாவீதின் வாழ்வில் கர்த்தருடைய நன்மையும், கிருபையும் தொடர்ந்து இருந்தது. எப்படியென்றால் முதன் முதலில் வேதம் கூறும்போது தாவீது சிவந்தமேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமுள்ளவனுமாயிருந்தான். தாவீது வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன், சவுந்தரியமுள்ளவன், கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார் என **1சாமு.16:12,18** -ல் கூறுகிறது. ஆம். கர்த்தர் நம்மோடுகூட இருக்கும்பொழுது நாம் ஒருநாளும் மந்தமுள்ளவர்களாக இருக்கமாட்டோம். தாவீது ஆடுகளை மேய்த்துக்கொண்டு வனாந்தரத்தில் இருந்தப்பொழுதும் நன்மை தொடர்ந்தது. சிங்கமும் கரடியும் ஆடுகளை பிடிக்க நினைத்தபோது தாவீது தன் வெறும் கைகளினாலே அவைகளை கிழித்துப் போடுகிறான். சவுலுக்குப் பயந்து ஓடினப்பொழுதும் நன்மை தொடர்ந்தது.

நன்மை என்று சொல்லும்போது, நாம் கேட்கிற ஆசீர்வாதங்கள் மாத்திரமல்ல. சகலவித பராமரிப்பு, பாதுகாப்பு, சமாதானம் இவை அனைத்தும் நன்மையான காரியங்களில் அடங்கியிருக்கிறது. தாவீதும் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டவன், எல்லா நன்மைகளும் ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்தே வருகிறது. தாவீதின் வாழ்க்கையில் கர்த்தருடைய பாதுகாப்பு இருந்தது. சவுல் தாவீதை கொல்ல முயற்சித்தப்பொழுதும் கர்த்தர் அவனை காப்பாற்றினார். **2 சாமு.8:14.**

தாவீதின் குடும்பத்தினர் அவன் மீது கவனமாயிருந்தார்களோ இல்லையோ! ஆனால் கர்த்தர் அவன் மீது கவனமாய் இருந்து காப்பாற்றினார். நல்லதொரு பெயரையும் கொடுத்தார். அதன்பின் தாவீதை சாமுவேல் அபிஷேகம் பண்ணினார். அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதை உடனடியாக யாரும் சிங்காசனத்தில் ஏற்றிவிடவில்லை. கோலியாத் என்ற இராட்சஷனின் கரங்களிலிருந்து தாவீது மூலம் கர்த்தர் மிகப்பெரிய விடுதலையை கொடுத்தார். அதற்குப் பிறகு சவுல் தாவீதை விரட்டி விரட்டி கொலை செய்ய வேண்டும் என நினைத்தப்பொழுதும், தேவன் தாவீதோடிருந்து சவுலின் கைக்கு தப்புவிக்கிறார். **தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார். 2சாமு.8:14**

இன்றைக்கு நாம் கொடுமையான காலங்களில் போய்க்கொண்டிருக்கிறோம். அன்று தாவீதை காப்பாற்றியது போல இன்றும் கர்த்தர் தாமே நம்மை காப்பாற்ற வல்லவராயிருக்கிறார். தாவீதை கர்த்தர் பாதுகாத்தார். தாவீதை கர்த்தர் விருத்தியாக்கினார். தாவீதை கர்த்தர் ஆசீர்வதித்தார். தாவீதினிமித்தம் கர்த்தர் அவன் வீட்டையும் ஆசீர்வதித்தார். **இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர் உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக என்றான். 2சாமு.7:29**

தாவீதின் வாழ்வில் நன்மைகள் மாத்திரமல்ல கிருபையும் தாவீதை பின்தொடர்ந்தது. தாவீது பாவம் செய்தாலும் ஆண்டவரை தேடிச்சென்றான். கர்த்தர் தாவீதை மன்னித்து தமது கிருபையை அவன்மீது அளவில்லாமல் பொழிந்தார்.தாவீதுக்கு மாத்திரம் அந்த கிருபை அருளப்படவில்லை. தாவிதின் நிமித்தம் அவன் சந்ததிகள் முழுவதும் ஆசீர்வதிக்கப்பட்டது. தேவகிருபை பெருகிக்கொண்டிருந்தது. **என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன். என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும். ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன். சங்.89:28,33.** இன்றைக்கும் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்காக அதிகம் பரிதபிக்கிறவராய் இருக்கிறார். இஸ்ரவேலின் மேல் அதிக கரிசனை உள்ளவராக இருக்கிறார். **(மத்.15:24)** இஸ்ரவேல் மக்கள் அனைவரும் ஒரு தேசமாக மாறினாலும் இன்றும் தாவீதின் நிமித்தம் அவருடைய கிருபை சந்ததி சந்ததியாய் பெருகிக் கொண்டேயிருக்கிறது.

ஆம். **நீங்கள்கூட தாவீதைப் போல நெறுக்கப்பட்டவர்களாய் இருக்கலாம். உங்கள் நிமித்தமாக தேவன் உங்கள் குடும்பத்தை ஆசீர்வதிப்பார். கிருபையினால் நிரப்புவார்.**

எசேக்கியேல் தீர்க்கதரிசி சொல்கிறதுபோல திறப்பிலே நிற்க ஒரு தேசத்திற்கே தேவன் ஒரு மனிதனையே தேடினார். அப்படியானால் உங்கள் குடும்பத்திற்கு உங்கள் ஜெபம் எவ்வளவு ஆசீர்வாதமாய் இருக்கும். நீங்கள் ஒருவர் ஜெபிக்கும்பொழுதே

கர்த்தர் பெரிய அற்புதத்தை செய்கிறார். இது மிகப்பெரிய நன்மையான காரியம். உங்கள் மீதும் அவர் வைக்கும் கிருபை எவ்வளவு அதிகமாய் பெருகும் என யோசித்துப் பாருங்கள்.

உங்கள் குடும்பத்தினர் கர்த்தரை தேடாமல் இருந்தாலும் நீங்கள் கலங்கவேண்டாம். நீங்கள் விடுகிற கண்ணீர், கெஞ்சுகிற ஜெபம், கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறதை கர்த்தர் நிச்சயமாக பார்த்து தம் கிருபையை உங்கள் வீட்டார் அனைவர் மேலும் விளங்கப்பண்ணுவார். ஒரு நாளும் சோர்ந்து போகாதிருங்கள். தாவீது சொல்கிறபொழுது, நான் ஜீவனுள்ளோர் தேசத்திலே நன்மையை காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன் என்று சொல்கிறான். **சங்.27:13.** எத்தனை பிரச்சனை வந்தாலும் நீங்கள் சோர்ந்து போகவேண்டாம். கர்த்தருடைய நன்மையும் கிருபையும் உங்கள் ஜீவன் இருக்கும்வரைக்கும் உங்களை பின்தொடரும் என்று விசுவாசிக்க வேண்டும். இன்றைக்கு நாளைக்கு மாத்திரமல்ல ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் பின்தொடரும் என தாவீதைப் போல நீங்களும் சொல்ல வேண்டும்.

**தாவீது ஆடு மேய்த்தப்பொழுதும், தாவீது வனாந்தரத்திற்கு ஓடினப்பொழுதும், தாவீது ராஜாவாக உயர்த்தப்பட்டபொழுதும் நன்மையும் கிருபையும் பின்தொடர்ந்தது. அதே நன்மையும் கிருபையும் எல்லா தேவதாசர்களையும் பின் தொடர்ந்தது. தானியேல் அடிமையாக கொண்டு போகப்பட்டபோது நன்மையும் கிருபையும் பின் தொடர்ந்தது. 3 ராஜாக்களின் ராஜ்யபாரத்தில் மிகப்பெரிய பிரபுவாக இருந்தப்பொழுதும், நன்மையும் கிருபையும் பின்தொடர்ந்தது.** அதே தானியேல் சிங்ககெபியில் இருக்கும்பொழுதும் நன்மையும் கிருபையும் பின்தொடர்ந்தது. யோசுவா கூடாரத்திலிருந்தப்பொழுதும், ஜனங்களை வழிநடத்தின பொழுதும் நன்மையும் கிருபையும் பின்தொடர்ந்தது.

இத்தகைய கிருபையும் நன்மையும் நம்முடைய வாழ்விலும் பின்தொடர நாம் அவருடைய பிள்ளைகளாய், அவர் மீது அன்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும். **ரோமர் 8:28-ன்**படி அவரை தேடும்பொழுது சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். **அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**

கர்த்தருடைய வருகை மிக சமீபமாய் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நாட்களில் கர்த்தர் என்னிடம் சொன்ன தெளிவான காரியம் என்னவென்றால், கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பி தம்முடைய பிள்ளைகள் மேல் முத்திரை போடும் காலம் இது என்றார். **கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார். எசேக்கியேல் 9:4** அவர் தம்முடைய பிள்ளைகளையும், தம்மை எதிர்ப்பவர்களையும் வேறு பிரிப்பார்.

இனிவரும் நாட்களில் அநேகர் தேவனுடைய அன்பைவிட்டு விலகிப்போவதை பார்ப்பீர்கள். தேவ பிள்ளைகள்கூட அநேகர் வழிவிலகி போவார்கள். ஏனென்றால் கர்த்தருக்கும் உலகத்திற்கும் அவர்களால் சரியாக ஈடுகொடுத்து போக முடியாது. முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். உலகமும் வேண்டும், ஆண்டவரும் வேண்டும் என்ற கோட்பாட்டை அநேக மக்கள் இப்போது ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. நாம் கர்த்தரை நேசிக்கிறோம் என சொல்லிவிட்டு உலகத்தை பின்பற்றி போகிறோம். உலக வாழ்க்கையை விட்டு ஆண்டவரையே தொடர்ந்து உறுதியாக பின்பற்றுவோம்.

கிறிஸ்துவை உண்மையாய் தேடுகிற நம்மையோ எல்லோரும் பகைக்கிற காலம் இது. மத்தேயு 10-ம் அதிகாரத்தில் உள்ள காரியங்கள் இன்று நிறைவேறிக்கொண்டிருக்கிறது. பேதுருவினிடத்தில் இயேசப்பா சொன்னது போல இக்காலங்களில் நடக்கும். **பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். லூக்கா 22:31.** கர்த்தரின் பிள்ளைகளுடைய வாழ்க்கையும் சுளகினால் புடைக்கப்படும் பொழுது நீங்கள் தப்ப வேண்டும் என்றால் கர்த்தருடைய பெலன் வேண்டும். கர்த்தருடைய கிருபை வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் நன்மையும் கிருபையும் பின்தொடர வேண்டுமானால் கர்த்தரை அன்பு செய்யுங்கள். அன்பு காணப்படுகிறபோது தாவீது போல, யாக்கோபு போல நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்! கடைசி காலத்தில் அவருக்காக குறிக்கப்பட்டவர்களாக வாழ்வீர்கள்! உங்கள் மேல் முத்திரை போடப்பட்டவர்களாகவும் இருப்பீர்கள்!

**Tamil Whats App No: 95004 87059**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

**மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

UPI Google Pay paytm PhonePe

இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

## வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

## Cell no. 94888 45627, 80987 42638

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# WE ARE HIRING

📍 Trichy



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

## ஜெபத்தை கேட்கும் சர்வ வல்லமையுள்ள தேவன் மந்திரவாதியை மாற்றினார்.

# அன்பரின் ஊழிய பங்காளரின் அனுபவ சாட்சி

### ஆரம்ப காலம்

என் பெயர் ரெய்மண்ட். நானும் என் மனைவி ரெஜினா இருவரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றி அதிகமாய் அறியாத நிலையில் வாழ்ந்துக் கொண்டிருந்தோம். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள். நான் கடல் சார்ந்த தொழிலையே செய்து கொண்டிருந்தேன். மிகவும் கடினமான ஒரு தொழில். இந்த தொழிலில் இருக்கிற அநேகர் மந்திரவாதத்தையும், குறி சொல்லுதலையும் அதிகமாய் நம்பியிருப்பார்கள். நானும் அவ்வாறே மாந்தீரிக காரியங்களை நம்பி செயல்பட ஆரம்பித்தேன். முடிவில் மிகப்பெரிய மந்திரவாதியின் சிஷ்யனாக மாறிவிட்டேன். அத்துடன் எனது வீட்டின் சாபம் என்னை தொடர்ந்தது. வாழ்க்கையில் நிம்மதி அற்றவனாய் அலைந்தேன்.

### கண்ணீரைக் கண்ட தேவன்!

என் மனைவி தேவ கிருபையால் இரட்சிக்கப்பட்டாள். அதன்பின் ஒவ்வொரு நாளும் என்னுடைய இரட்சிப்பிற்காக கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டிருப்பாள். அந்நிலையில் நடுகடலில் நான் படகில் இருந்தப்பொழுது ஒரு நாள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டேன். எனினும் அதை அறிந்துகொள்ளாதவனாக இருந்துவிட்டேன்.

### அன்பரின் ஊழிய கூட்டத்தில்!

ஒரு சமயம் என் மனைவியினுடைய வற்புறுத்தலின் பேரில் நாகர்கோவிலில் உள்ள விஜயதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துக் கொண்டேன்.



Dr.ஆனந்த ஸ்திரா என்னைவிட பெரிய மந்திரவாதியா என்ற ஒரு கேள்வி மனதில் ஓடிக்கொண்டிருந்தது. என் சகோதரன் ஒருவர் கை, கால் விளங்காமல் இருந்தார். இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதங்களில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. பெரிய பெரிய மாந்தீரிக காரியங்களை கற்று தேர்ந்திருந்தபடியால் அவற்றில் தான் என் நம்பிக்கை இருந்தது. இப்படியாக என் மனதில் பலவித எண்ணங்களுடன் கூட்டத்தில் அமர்ந்திருந்தேன்.

அப்பொழுது என் சந்தேகத்தை எல்லாம் தீர்க்கும் வகையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெப வேளையில் என் பெயரைச்சொல்லி அழைத்தார்கள். "ரெய்மண்ட் மந்திரவாதிக்கு பின்னாக ஓடாதே, எல்லா மந்திர தந்திரங்களும் இயேசுவின் நாமத்தில் சிதறடிக்கப்படும். கர்த்தருக்கு விரோதமான மந்திரவாதமுமில்லை, பில்லி சூன்யமும் இல்லை, இப்பொழுதே மனந்திரும்பு. இயேசுகிறிஸ்து உன்னை

ஒரு பெரிய ஊழியக்காரனாக எடுத்து பயன் படுத்துவார்" என்று கூறினார். அந்த சத்தம் நான் கடலில் கேட்ட சத்தத்தைப் போல இருந்தது. என் உடல் நடுங்கியது. தெய்வீக வல்லமை என் மேல் இறங்கினவுடன் மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது. அந்த நிமிடத்திலிருந்து மந்திர சக்திகளும், மந்திரவாதத்தின் வல்லமைகளும் என்னைவிட்டு அகன்றது.

## ஆவிக்குரிய அனுபவங்கள்

அந்த நாளிலிருந்து உண்மையாக நானும் என் மனைவி மற்றும் பிள்ளைகளும் கர்த்தரை வாஞ்சையோடு தேட ஆரம்பித்தோம். சகோதரரின் ஒரு கூட்டத்தைகூட நாங்கள் அந்நாளிலிருந்து தவறவிடுவது இல்லை. ஆவியானவர் என்னை வழிநடத்த ஆரம்பித்தார். சகோதரர் நடத்தின வல்லமை முகாமில் இரண்டு முறை பங்குபெற்றேன். கர்த்தர் தம்முடைய வரங்களினால் என்னை நிரப்பினார். என்னுடன் கடலில் வேலை பார்த்த நண்பர்களுக்கு சுவிசேஷம் சொல்ல ஆரம்பிதேன். அவர்கள் கஷ்டங்களை கேட்டறிந்து அவர்களுக்காக ஜெபிக்கும் ஒரு ஜெப வீரராக இருக்கின்றேன். எங்கள் வீட்டிலேயே ஜெப கூட்டங்களை நடத்தி வருகிறோம். என் குடும்பத்தில் இருந்த சாபமும் நீங்கியது!

## குடும்பத்தின் ஆசீர்வாதங்கள்!

என் மூத்த மகளின் திருமண காரியத்திற்காக சகோதரரிடம் ஜெபிக்கும்படி சொன்னோம். சகோதரர் ஜெபித்து சொன்னபடியே கர்த்தர் ஆச்சரியமாக நல்ல மாப்பிள்ளையை தந்தார். மூத்த மகள் பெயர் டினு. மாப்பிள்ளை பெயர் நிமேஷ். என் குடும்ப வாழ்க்கை, ஊழியப் பாதையில் கர்த்தர் ஒரு குறைவும் இல்லாமல் வல்லமையாக பயன்படுத்தி வருகின்றார். எங்களுக்கு வருகிற எல்லா ஆசீர்வாதங்களிலிருந்து அன்பரின் ஊழியத்திற்கும், S.J.Saves Trust–க்கும் தாராளமாக கொடுத்து தாங்கி வருகிறோம். கர்த்தர் எங்களை மேன்மேலும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

சகோ. ரெய்மண்ட், நாகர்கோவில்.

**அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெற்று வரும் கூட்டங்கள்**

**✔ நற்செய்திக் கூட்டங்கள் ✔ குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள்**

**✔ அப்போஸ்தல தீர்க்கதரிசன வல்லமை முகாம்**

நம்முடைய கூட்டங்களுக்கு வருகிறவர்களில் அநேகர் கர்த்தரை அறியாத பிள்ளைகள். தீராத வியாதிகள், பல ஆண்டுகளாக படுக்கையில் உள்ளவர்கள், செய்வினை ஏவல், மாந்திரீக காரியங்களினால் போராடுகிற மக்கள் அதிகமாக வருகின்றனர். சகோதரர் ரெய்மண்ட் – ஐ போல கர்த்தர் தாமே அநேகரை விடுதலையாக்கி அனுப்புகிறார்.

நம்முடைய நற்செய்தி கூட்டங்கள், குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள் தொடர்ந்து பல இடங்களில் நடைபெற பணத்தேவைகள் அதிகமாக இருக்கிறது. உங்கள் குடும்பத்தின் சார்பாக இந்த கூட்டங்களுக்கு நீங்கள் உதவி செய்யுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள். கர்த்தர் உங்கள் பிரயாசத்திற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து ஆசீர்வதிப்பார்.

இதுவரை நீங்கள் அன்பரின் ஊழிய பங்காளராக இல்லையென்றால் கீழ்க்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு உடனே தொடர்புக்கொண்டு பங்காளராவதற்கான தகவல்களை அறிந்துக் கொள்ளுங்கள்.

**Whatsapp No. - 95004 87061**



# Praise Report
# துதி அறிக்கை

## 10 வருட வேதனை சில நாட்களில் முடிந்தது! புத்தாண்டு வாக்குத்தத்தத்தின்படியே தடைகள் நீங்கியது! ஆசீர்வாதம் வந்தது!



நான் சகோதரனை அறிந்த நாள் முதற்கொண்டு அவர்களுடைய கூட்டங்களுக்கு தவறாமல் செல்வேன். அவர்களுடைய அன்பின் வார்த்தைகள் என்னை ஆழமாக தொட்டது. இக்கட்டான பல நேரங்களில் சகோதரர் அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி தொடர்ந்து கேட்டுக் கொள்வேன்.

எனக்கு தீராத ஒரு பிரச்சனை இருந்தது. அதனால் நான் இறந்து விடுவேனோ என ஒவ்வொரு நாளும் பயந்து வாழ்ந்துக்கொண்டிருந்தேன். என் நிலையை அறிந்த சகோதரர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். **ஜெபத்தைக் கேட்ட தேவன் தாமே அந்த பிரச்சனையை நீக்கி, என் ஆயுளை கூட்டித் தந்துள்ளார்.**

எனக்கு இரு பெண் குழந்தைகளை கர்த்தர் கொடுத்தார். இரு மகள்களும் நன்றாக படித்தார்கள். மூத்த மகள் படித்து முடித்து ஆசிரியராக வேலை பார்க்கிறாள். மூத்த மகளுடைய திருமண காரியத்தில் தடைகள் இருந்தது. அதனால் சுமார் 10 வருடமாக மகளுடைய திருமணத்திற்காக அதிகமாக போராடி ஜெபித்து முயற்சித்தோம். திருமண காரியம் வாய்க்கவில்லை.

சகோதரர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு பேசினோம். சகோதரர் அவர்கள் கூட்டத்திற்கு வந்து நேரில் பார்க்கும்படி சொன்னார்கள். சமீபத்தில் முன் அனுமதி பெற்று சகோதரரை நேரில் வந்து பார்த்தோம். **என் மகளுக்காக சகோதரர் ஊக்கமாய் ஜெபித்து, இனி எந்த தடையும் இல்லாமல் ஒரு சில நாட்களில் திருமணம் நடைபெறும் என கூறினார்கள். என்ன ஆச்சரியம்! ஜெபித்து சென்ற ஒரு சில நாட்களில் திருமணம் fix ஆனது. ஜனவரி 12-ம் தேதி என் மூத்த மகளுடைய திருமணம் சிறந்த முறையில் நடைபெற்றது.**

பொருத்தனையின் ஜெபத்தை கேட்கிற தேவனுக்கு மகிமையாக, **S.J.** அறக்கட்டளைக்கு எங்கள் பொருத்தனை தொகையை வழங்கினோம்.

**- சகோதரி லதா சம்பத்.**

## ஆயுளைக் கூட்டிக் கொடுத்த கர்த்தர்



என் பெயர் ஞானதுரை. 18 வருடங்களாக அன்பரின் ஊழியத்தில் பங்காளராக நாங்கள் இருந்து வருகிறோம். எங்கள் குடும்பத்திற்கு ஏதாவது கஷ்டங்கள் வரும்பொழுதெல்லாம் உடனே அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் வாயிலாக தெரிவித்து ஜெபிக்கும்படி சொல்லுவோம். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடமிருந்து ஜெபித்து பதில் கடிதம் வரும். கர்த்தர் இம்மட்டும் எங்களை நேர்த்தியாக வழிநடத்தி வருகிறார்.

கடந்த நாட்களில் எனக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. அதற்காக 3 மருத்துவமனைகளுக்கு மாறி மாறி செல்லும்படியான சூழ்நிலை ஆனது. 3-வதாக சென்ற மருத்துவமனையில் ICU-ல் ஒரு வாரம் இருந்தேன். **அப்பொழுது என் மனைவி அன்பரின் ஊழியத்திற்கு தொடர்புக் கொண்டு ஜெபிக்கும்படி சொன்னாள். அதன்பின் கர்த்தர் அற்புதமாக இரங்கி ஒரு சில நாட்களில் நான் நல்ல சுகத்துடன் வீடு திரும்பும்படி தயை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**- சகோ. ஞானதுரை, சென்னை.**

## ஆபத்து நேரத்தில் உதவிய கர்த்தர்!



என் பெயர் பெலிக்ஸ் பாண்டியன். நான் நீண்ட நாட்களாக அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கிறேன். ஒரு சில நாட்களுக்கு முன் நான் பாத்ரூம் சென்றப்பொழுது தவறி விழுந்தேன். அந்த நேரத்தில் இயேசுவே என கூப்பிட்டேன். என் தலை கீழே அடிப்படாதபடி கர்த்தர் தாமே ஒரு பிளாஸ்டிக் குடத்தின்மீது விழும்படி செய்தார். அதனால் எனக்கு எந்த ஆபத்தும் இல்லை. தாம்பரம் கூட்டத்திற்கு நான் நல்ல சுகத்துடன் வந்து சாட்சி சொல்ல தயை செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். பேத்தியின் திருமணத்திற்காக ஜெபிக்கும்படி **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு கடிதம் அனுப்பி இருந்தோம். **சகோதரர் அவர்கள் ஜெபித்து கானாவூர் திருமணத்தைப் போல பேத்தியின் திருமணத்தை கர்த்தர் நேர்த்தியாக நடத்தி தருவார் என எழுதி பதில் அனுப்பியிருந்தார்கள். அதன்பின் திருநெல்வேலியிலிருந்து நல்ல குடும்பத்தினர் பேத்தியை பார்க்க வந்தார்கள். எங்களிடம் திருமணத்திற்கான பணம் எதுவும் இப்போது இல்லை என கூறினோம். அவர்கள் எங்களிடம் எதுவும் வேண்டாம் என கூறிவிட்டார்கள். திருமணமும் கர்த்தர் கிருபையால் நேர்த்தியாக நடந்து முடிந்தது.**

**என் பேத்தியின் திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்காக அன்பரின் ஆறுதல் ஒரு டிவி நிகழ்ச்சிக்குரிய தொகை ரூ. 15,000-த்தை எங்கள் பொருத்தனை காணிக்கையாகத் தருகின்றோம்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

**- சகோ. பெலிக்ஸ் பாண்டியன், படப்பை, சென்னை.**




## சிறு பிள்ளைகளை நேசிக்கும் கர்த்தர்



என் பெயர் ராதா. திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு முன்பு தொடர்ந்து வந்துக் கொண்டிருந்தேன். தற்பொழுது வரஇயலவில்லை. சமீபத்தில்என் மகள் என்னிடம் சொன்ன காரியம், ஏதோ ஒரு கருப்பு உருவம் என்னிடம் வந்து பேசுகிறது. உன்னை கொல்லப்போகிறேன். மாடியிலிருந்து கீழே விழு என கூறுகிறது என்றாள். முதலில் நான் நம்பவில்லை. என் மகள் அடிக்கடி இவ்வாறு சொல்ல ஆரம்பித்தவுடன் எனக்கும் பயம் வந்தது. உடனே **நவம்பர் மாதம் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு மகளை அழைத்து வந்து சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் அவர்கள் என் மகளின் தலைமேல் கைவைத்து ஜெபித்து அனுப்பினார்கள். அதிலிருந்து இன்று வரை எந்த பிசாசின் தொந்தரவும் என் மகளுக்கு இல்லை.**

**அத்துடன் என் மகளிடம் இயேசப்பா, நீ பயப்படாதே, நான் உன்னுடன் இருக்கிறேன் என தினந்தோறும் பேசுகிறார். என் மகளை கொடிய பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். பாரத்துடன் ஜெபித்து அனுப்பிய சகோதரர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவிக்கிறேன்.** **- சகோதரி. ராதா, திருச்சி.**

## சமாதானத்தை நதிபோல அருளிய கர்த்தர்!

2019-ம் வருடம் கிறிஸ்தியா நகரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். அன்று நான் மிகவும் வேதனையோடு வந்தேன். காரணம் என் 2-வது மகன் சமாதானமில்லாமல் இருந்தான். இயேசப்பா இன்று தருகிற செய்தி எனக்குரியதாக இருக்கவேண்டும் என ஜெபித்து வந்தேன்.

சகோதரி **Dr.ஜேன் ஜாஷ்வா** அவர்கள் ஜெப வேளையில், **ரெஜினா என்ற சகோதரி தன் மகனை நினைத்து, மகனுடைய சமாதானத்திற்காக கண்ணீரோடு ஜெபித்துக்கொண்டு இருக்கிறீர்கள். இப்பொழுதே சமாதானத்தை காண்பீர்கள்** என சொன்னார்கள். எனக்கு மிகவும் ஆச்சரியமும், அதிசயமாகவும் இருந்தது. கூட்டம் முடிந்து வீட்டிற்குள் நுழைந்தேன். **மகன் மிகவும் சமாதானமாய் வீட்டில் வேலை செய்துக்கொண்டு சந்தோஷமுகமாய் காணப்பட்டான். எங்களுக்கு சமாதானம் தந்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!** **- சகோதரி ரெஜினா டேனியல், கிறிஸ்தியா நகரம்.**

## எவரையும் மேன்மைப்படுத்தும் கர்த்தர்!



என் பெயர் பழனிமுத்து. ஆட்டோ டிரைவராக இருக்கிறேன். திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு தொடர்ந்து வருகிறேன். ஒரு முறை உயிருக்கு ஆபத்தான நிலையில் போராடினேன். கர்த்தர் எனக்கு புது ஜீவன் தந்து அற்புதம் செய்தார். அதன்பின் வீடு கட்டுவதற்கு பணம் இல்லாமல் அதிகம் கஷ்டப்பட்டேன். **அப்பொழுது கூட்டத்திற்கு வந்து சகோதரர் ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் நிலையைச் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதன்பின் ஒரு சில நாட்களில் Rs.8,69,000 பணம் கிடைத்து வீட்டை கட்டி முடிக்க கர்த்தர் உதவி செய்தார். அற்புதம் செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.** சகோதரர் குடும்பத்தினருக்கும் என் நன்றியை தெரிவிக்கிறேன். **- சகோ. பழனிமுத்து, அரியலூர்.**

# Rev. தாமஸ் ராக்லாண்ட்
## (1815 - 1858)



இங்கிலாந்து தேசத்தில் பிறந்தவர் தாமஸ் ராக்லாண்ட். இவர் பிறப்பதற்கும் ஆறு மாதம் முன்பே தந்தை இறந்து விட்டார். தாயும் இவருடைய சிறு வயதிலேயே இறந்து விட்ட காரணத்தினால் தன் மாமாவின் அரவணைப்பில் வளர்க்கப்பட்டார். கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்றார். அதன்பின் இறையியல் படிப்பை முடித்து ஆயராக பணி யாற்றிக் கொண்டிருந்த நாட்களில் மிஷனெரி களின் பணிகளைப் பற்றி அறிந்து தானும் ஒரு மிஷனெரி ஆக செல்லவேண்டும் என முடிவெடுத்து இந்தியாவிற்கு வந்தார்.

### கிறிஸ்துவிற்காக பாடுகள்!

வடதிருநெல்வேலியில் அமைந்திருந்த கிராமங்களுக்கு நற்செய்தியை பறைசாற்ற உற்சாகமாய் வந்தார். நுழைந்தது தான் தாமதம். அவரை நோக்கி கற்களை வீசினார்கள். ஒருவன் தடியால் அவர் தலையில் அடித்தான். தொடர்ந்து சரமாரியான அடிகள் அவர் மேல் விழுந்தன. நடக்கக் கூட தெரியாத சிறுபையனும் கல்லை தூக்கி எறிந்தது தான் பரிதாபம். அந்த அளவிற்கு நற்செய்தியை ஏற்க மறுத்த கடின உள்ளத்தினரே அப்பொழுதும் வாழ்ந்து வந்தனர்.

### கிறிஸ்தவ ஆலயங்கள் எழும்பின!

எதிர்ப்புகளைக் கண்டு பழகிப் போன ராக்லாண்ட் இன்னும் உற்சாகமாய் கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவின் அன்பு நெறியில் மக்களை நடத்த ஆரம்பித்தார். இவருடைய முயற்சியால் சிவகாசி மற்றும் சுற்றுப் புறங் களில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன.

### ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படல்!

மழை, வெயில், பசி, அவமானப் பேச்சுகள், சரீர துன்பங்கள் எதையும் பொருட்படுத்தாது தன் ஊழியப்பணியைத் தொடர்ந்தார். அதிகாலையில் எழுந்து ஜெபிக்கும் பழக்கமுடையவர். அதிகாலை 4 மணிக்கே ஊழியத்திற்கு சென்று விடுவார். சரியான சாலை, வாகனம் வசதிகள் இல்லாத அந்த நாட்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சென்று சுவிசேஷத்தை அறிவித்த சுவிசேஷச் செம்மல்!

### நோயின் தாக்கமும், மரணமும்!

பசியின் களைப்பினால் தொப்பியில் கூழ் வாங்கிக் குடித்துவிட்டு, மீண்டும் அலைந்து நற்செய்தியை அறிவித்தவர். ஓயாத அலைச்ச லினால் அவர் உடல் நலிந்தது. காசநோய் அவரைத் தாக்கியது. இரத்த வாந்தி எடுத்தார். நோயின் தாக்குதலினால் தன்னுடைய 44-வது வயதில் மரணத்தைத் தழுவினார். **எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவை களைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். பிலி.4:7.**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

**அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே உதவும் (கலாத்தியர் 5:6)**
**இப்போதும் நம்பிக்கை, விசுவாசம், அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது. (1 கொரி. 13:13)**

மேற்கண்ட பரிசுத்த வேத வசனத்தின்படியே அன்பை மையமாக வைத்து செயல்படுகிற நமது **S.J.Saves Trust-**க்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். **S.J.Saves Trust-**ன் பல்வேறு பணிகளில், ஏழை மாணவர்களுக்கு கல்வி கற்றுத்தரும் பணியை ட்யூஷன் சென்டர் வாயிலாக நிறைவேற்றி வருகிறோம்.

நம்முடைய ட்யூஷன் சென்டரில் படிக்கும் பிள்ளைகள் அத்தனை பேரும் 100 சதவிகிதம் சாதாரண பிள்ளைகளைப் போல விரைவாக படிக்கமுடியாது. ஏனென்றால், அவர்கள் வளர்ந்து வருகிற முறை, அவர்கள் கடந்து வந்த இக்கட்டான குடும்ப சூழ்நிலையின் நிமித்தம், படிக்கும் பாடங்களை உடனடியாக புரிந்து கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதே இல்லை. ஐந்து வயதிலேயே வேலைக்கு அனுப்பி விடுகிறார்கள். அவர்கள் சம்பளத்தை வைத்து குடித்து காலத்திற்கு முன்பே இறந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை உள்ளதை நன்கு அறிந்துதான் கர்த்தருடைய கிருபையினால் நாங்கள் நன்கு படித்த ஆசிரியர்கள் மூலம் மாணவர்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கு பாடங்களை சொல்லிக் கொடுத்து, இரவு உணவளித்து, மருந்துகள் கொடுத்து ஆதரிக்கிறோம்.

உங்கள் பிள்ளைகள் நல்லபள்ளியில் படிக்கும் பொழுது இந்த ஏழை பிள்ளைகளை மறவாதீர்கள். அதோடுகூட இந்தபிள்ளைகள் 10ஆம் வகுப்பை முடித்தவுடன் வேலைக்கு சென்று விடுகிறார்கள். அவர்களை கல்லூரிக்கு அனுப்பும் அளவிற்கு பெற்றோரிடத்தில் பணவசதி இருப்பதில்லை. கடின முயற்சி எடுத்து நம்முடைய ட்யூசன் சென்டர் மூலம் நன்கு படித்து முன்னேறினாலும், மேற்படிப்பிற்கான பணம் கட்டமுடியாமல், கல்லூரிக்கு போக முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

நான் பிள்ளைகளை சந்திக்கும் பொழுதெல்லாம் அன்பு பிள்ளைகளிடம் கேட்பேன். **"நீங்கள் வருங்காலத்தில் என்ன படிக்கப் போகிறீர்கள், உங்களுக்கு என்ன ஆசை" என்று கேட்டால் "சிலர் மருத்துவர் ஆக வேண்டும் என்றும், சிலர் ஐ.பி.எஸ், சிலர் விஞ்ஞான ஆராய்ச்சியாளராக மாறுவேன் என்றும், சிலர் ஐ.ஏ.எஸ். என்றும், சிலர் விண்வெளி பயணம் செய்ய வேண்டும் என்றும் இன்னும் சிலர் பேராசிரியராக, பொறியாளராக வேண்டும்"** என்றும் ஏக்கத்தோடு கூறுவார்கள்.

இதனை கேட்கும் பொழுது என் கண்கள் கலங்கும். ஏனென்றால் பெற்றோர்களில் அநேகர் படிக்காதவர்கள். அவர்கள் கடினமான வேலைகளையே செய்து இளம் வயதிலேயே அநேக வியாதி களினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலேயே அவர்கள் வாழ்நாள் சென்று விடுவது பரிதாபத்திற்குரியது.

### ஏழை மாணவர்களுக்கான ஆனந்த ஸ்காலர்சிப் திட்டம்!

இத்தகைய ஏழை மாணவர்களை மனதில் வைத்து ஆனந்த் ஸ்காலர்சிப் என்ற புதிய திட்டத்தையும் நாம் கர்த்தருக்குள் தீர்மானித்திருக்கிறோம். ஏழை மாணவர்கள் மேற்படிப்பிற்கு போக முடியாமல் கஷ்டப்படும்பொழுது அவர்களுக்கு **S.J.Saves Trust** மூலம் பணஉதவி மற்றும் புத்தகங்களை வாங்குவதற்கு தேவையான உதவிகளை செய்து அவர்களை உயர்த்துவது என முடிவு